2022 மார்ச் 22]

காரணத்தினால், அதிகப்படியான விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் பம்ப்செட்டுகளை இயக்குகின்ற காரணத்தினால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகையால், இந்த ஒன்றியத்தின் மையப் பகுதிகளாகவுள்ள நத்தம் ஊராட்சிப் பகுதி அல்லது சேவாத்தூர் ஊராட்சிப் பகுதியை மையமாகக் கொண்டு 110 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையத்தை அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் செய்வதற்காக கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, தேவையேற்படின் துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-9-2021 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த திட்டத்தை தங்களுடைய பொற்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். இன்றுவரை 87,465 மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமிருக்கக்கூடிய மின் இணைப்புகளை வழங்கும் பணி இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புத் திட்டம், இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்; மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலே அனல் மின் நிலையம் சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கே fly ash இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்குப் பறந்து சென்று பொதுமக்களுக்குத் தொந்தரவு செய்கிறது. எனவே,